©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 4.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 39] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர், 28, 2016
புரட்டாசி 12, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2047

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 138, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 23 ஜூன் 2016.]*

1951 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 69/1951) 43–ஆம் பிரிவைச் சேர்ந்த (1), ஆம் உட்பிரிவு, 18A பிரிவைச் சேர்ந்த (2) ஆம் உட்பிரிவு மற்றும் 18B பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு, 1955 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 43 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில், அத்தியாயம் VIII–க்குப் பின்னர், பின்வரும் அத்தியாயம் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். அவையாவன;–

**அத்தியாயம் IX**

**பாதுகாப்பு குறித்த கட்டுப்பாட்டு விதித்துறைகள்**

**91. மலைத் தோட்டத்துக்குள் பூச்சிகொல்லிகள் இருப்பு வைத்தல் மற்றும் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லுதல்:–**(1) பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்கள் எதுவும் உணவுப்பொருட்கள், கால்நடைத் தீவனங்கள் மற்றும் குடிநீர் மீது நேரடியாகப்படும் வகையில் எடுத்துச் செல்லப்படக்கூடாது.

(2) இருப்பு வைத்திருக்கும்போது அல்லது இடம் விட்டு இடம் எடுத்துச்செல்லும்போது பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்களில் ஒழுக்கு அல்லது கசிவு ஏதேனும் ஏற்பட்டால் மண் மற்றும் நீர் நச்சு ஆகாதவாறும் மாசுபடாதவாறும் அவசர நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியது வேலையளிப்பவரின் பொறுப்பாகும்.

**(3)** பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுபொருட்கள் அடங்கிய சிப்பங்கள், பூச்சிகொல்லிகளின் அளவு மற்றும் தன்மைகளுக்கேற்றவாறு, தனி அறைகளில், அல்லது அறைகளுக்கு அப்பாற்பட்டு அமைந்திருக்கும் தனி மனையிடங்களில் அல்லது அத்தகைய பொருட்களை, இருப்பு வைப்பதற்கான மனையிடங்களில், அல்லது பூட்டு, சாவி வசதியுள்ள தனி அலமாரிகளில் இருப்பு வைக்கப்படவேண்டும்.

**(4)** பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்கள் இருப்பு வைப்பதற்கான அறைகள் அல்லது மனையிடங்கள் போதிய உருவளவைகளில் நல்லமுறையில் கட்டப்பட்டனவாக, போதிய வெளிச்சம் மற்றும் காற்றுக்கான ஏற்பாடுகள் அமையப்பெற்றனவாக நல்ல உலர்நிலை கொண்டனவாக இருக்கவேண்டும்.

92. **பெண்கள் மற்றும் வளரிளம்பருவத் தொழிலாளர்கள் பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்களைக் கையாளுவதற்கான தடை:—**பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்களைக் கையாளுதல், இருப்பு வைத்தல் மற்றும் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லும் நடவடிக்கைகளில் பெண் தொழிலாளர்கள் மற்றும் வளரிளம் தொழிலாளர்கள் ஈடுபடுவதை அனுமதிக்கக்கூடாது.

**93. மேற்பார்வையாளர்களின் கல்வித் தகுதி மற்றும் பணி நியமனம்:—**பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்களைப் பயன்படுத்தல், கையாளுதல் இருப்பு வைத்தல் மற்றும் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லுதல் ஆகிய நடவடிக்கைகள் கீழ்க்காணும் கல்வித்தகுதிகள் கொண்ட ஒரு உரிய நபரால் மேற்பார்வையிடப்பட வேண்டும்.

(i) அந்த நபர் வேளாண்மை அல்லது அறிவியலில் பட்டம் பெற்றவராக இருக்கவேண்டும் அல்லது வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்களைக் கையாள்வது குறித்து ஒருங்கிணைந்த தென்னிந்திய மலைத்தோட்டத்தொழில் சங்கத்தினரால் (UPASI) நடத்தப்பெறும் சான்றிதழ் படிப்பில் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும்.

(ii) அந்த நபர், பயிற்சியளிப்பதற்கென ஏற்படுத்தப்பட்ட பயிற்சி நிலையம் ஒன்றில் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும்.

(iii) அந்த நபர், தொழிலாளர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிப்பதற்கான செல்திறனுள்ள சான்று ஒன்றினை புனித ஜான்ஸ் ஆம்புலன்ஸ் பயிலகத்தில் பெற்றவராக இருக்க வேண்டும்.

**94. பயிற்சி:—(1)** பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்களைக் கையாளுவதில் ஈடுபடும் நபர்கள் அவ்வப்போது மாநில அரசினால் அறிவிக்கப்படும் பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பாதுகாப்புக் கருவிகளைக் கையாளுவதற்கும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்வதற்குமான உரிய பயிற்சி பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

**(2)** வேளாண் வேதிப்பொருட்கள் அல்லது இதர வேதிப்பொருட்களை இடுதல், கையாளுதல் இடம்விட்டு இடம் எடுத்துச் செல்லுதல் அல்லது நேரடியாகத் தொடுதல் ஆகியவற்றில் ஈடுபடும் அனைத்துத் தொழிலாளர்களும் கீழ்க்காணும் துறைக்கூறுகளில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(i) பொதுத் தொழில்செய் நலவியல்;

(ii) பூச்சிகொல்லிகள் இனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருட்கள், கலவை உருவாக்கம், அவற்றின் பெயர்கள் மற்றும் அவற்றின் உயிர்க்கொல்லித் தன்மை;

(iii) பாதுகாப்புக்கான தனிப்பட்ட உடைகள் மற்றும் கருவிகள் குறித்த சரியான பயன்பாடு;

(iv) தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வேதியியல் பொருட்களால் ஏற்படுகின்ற உடல்நலம் மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்பினைக் குறைக்கும் நடவடிக்கைகள், கருவிகள், செய்முறை நுட்பங்கள், சூழல் வரைபட தகவல், மருத்துவ பரிசோதனை முதலானவை;

(v) வேதியியல் பொருட்களால் ஏற்பட்ட எதிர்பாராத தொடுகை மற்றும் நஞ்சூட்டப்படல் போன்ற இனங்களில் அவசர கால நடைமுறைகள், முதலுதவி மற்றும் மருத்துவ கண்காணிப்பு;

(vi) வேதியியல் பொருட்களைக் கையாளுதலில் செய்முறை நுட்பம் மற்றும் வேளாண் வேதியல் பொருட்களைச் சரியான அளவில் பயன்படுத்துதல்;

(vii) ஒட்டுநர்கள், வேளாண் வேதியல் பொருட்களைப் பாதுகாப்பாகக் கையாளுதல் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லுதல்; மற்றும்

(viii) மலைத்தோட்டத்துக்குப் பொருத்தமாகத் தேவைப்படும் இதர பயிற்சி.

**95. தொழிலாளர்களுக்கான மருத்துவ பரிசோதனை:– (1)** பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்களைக் கையாளுதல், செயல் தொடுகை அல்லது தெளித்தல் அல்லது கலக்குதல் ஆகியவற்றில் ஈடுபடும் தொழிலாளி ஒவ்வொருவருக்கும் முதலில் பணிக்கமர்த்தும் போதும் பின்னர் ஆறு மாதங்களுக்கொருமுறையும் தோட்ட மருத்துவ மனை அல்லது குழு மருத்துவ மனை அல்லது இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள இதர மருத்துவ மனையில் மருத்துவப் பரிசோதனை செய்யப்படவேண்டும்.

(2) மருத்துவ பரிசோதனை மற்றும் ஆய்வக சோதனைகள் படிவம் 27இல் பதிவு செய்யப்படவேண்டும்.

(3) நஞ்சூட்டப்பட்டதான அறிகுறிகள் காணப்படும் எந்தவொரு நபராக இருந்தாலும் உடனடியாக பரிசோதிக்கப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்படவேண்டும்.

**96. உடல்நல ஆவணம் பராமரித்தல்:–**வேலையளிப்பவர் ஒவ்வொருவரும் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு இரு முறை அல்லது தேவையேற்படும் போது மருத்துவ பரிசோதனை குறித்த உடல்நல ஆவணம் பராமரிக்க வேண்டும். அந்த ஆவணம் மலைத் தோட்டத்தில் வைக்கப்பட்டிருப்பதோடு அதனை தேவைப்படும் தொழிலாளர் பார்வையிடுவதற்கான வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**97. சலவை, குளியலறை மற்றும் பொருள் வைப்பறை வசதிகள்:–(1)** பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்களைக் கையாளுதலில் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு சலவை, குளியலறை மற்றும் பொருள் வைப்பறை வசதிகளை வேலையளிப்பவர் ஒவ்வொருவரும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

(2) பாதுகாப்பு உடை மற்றும் கருவிகள்:– (a) பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்களைக் கையாளும் நபர்கள் அவற்றைச் செய்முறைப்படுத்துதல், பகிர்ந்தளித்தல், கலத்தல் மற்றும் தெளித்தலின் போது உரிய உடைகளணிந்து பாதுகாக்கப்படவேண்டும்.

(b) பாதுகாப்பு உடை, பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட் கலவைகளின் எத்தகைய ஊடுருவலையும் தடுக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும். பயன்பாட்டுக்குப் பின்பு அந்த நச்சுப் பொருட்கள் உடையினின்றும் கழுவி அகற்றத்தக்கதாக அந்த மூலப்பொருட்கள் அமையவேண்டும்.

(c) பாதுகாப்பு உடையின் ஒரு முழுமையான தொகுதி என்பது கீழ்காணும் ஆடைகளைக் கொண்டதாக இருக்கவேண்டும், காண்க:–

(i) தொப்பியுடன் கூடிய வெளிப்புறப் பாதுகாப்பு ஆடை.

(ii) திரவங்கள் உட்புகாதவாறு தடுக்கும் மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்டு முழங்கை வரையிலும் நீளமுள்ளதான ரப்பர் கையுறைகள் அல்லது அது போன்ற பாதுகாப்புக் கையுறைகள்.

(iii) தூசி புகாத கண்ணாடிகள்.

(iv) அடிபுதை அரணக் காலணிகள் (Boots)

(v) மீளப்பயன்படுத்தத்தக்க துணி முகமூடிகள்.

**98. பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்களின் பட்டியல்:–** வேலையளிப்பவர் ஒவ்வொருவரும் மலைத் தோட்டங்களில் 1968 ஆம் ஆண்டு பூச்சிக்கொல்லிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 46/1968) கீழ் மத்திய அரசால் பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்கள் என அறிவிக்கப்பட்டுள்ளவற்றின் பட்டியலைக் காட்சிக்கு வைக்க வேண்டும்.

**99. முன்னெச்சரிக்கை அறிவிப்புகள்:–** வேலையளிப்பவர் ஒவ்வொருவரும் மலைத் தோட்டங்களில், பூச்சிகொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்கள் கையாளப்படுகின்ற இடம் அல்லது அதனருகில், பின்வரும் முன்னெச்சரிக்கை அறிவிப்புகளைக் காட்சிப்படுத்தவேண்டும்.

(i) வெளிப்புற முழு உடை, கையுறைகள், கண்ணாடி ரப்பர் அடிபுதை அரணக் காலணிகள் மற்றும் அகல விளிம்புத் தொப்பி போன்ற பாதுகாப்பு உடை பயன்படுத்தவும்.

(ii) பூச்சிக்கொல்லி மற்றும் புழுக்கொல்லிகளால் மாசுபட்ட ஆடைகளை அணியாதீர்.

(iii) பாதுகாப்பு உடைகளை சோப்பு மற்றும் தண்ணீர் கொண்டு அலசிச் சுத்தம் செய்யவும்.

(iv) குழந்தைகள், நோயாளிகள் மற்றும் மகப்பேற்றுப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாயர்கள் பூச்சிக்கொல்லிகள் மற்றும் புழுக்கொல்லிகளைக் கையாள அனுமதிக்காதீர்.

(v) பூச்சிக்கொல்லிகள் மற்றும் புழுக்கொல்லிகளைக் கையாளும்போது உண்ணுதல், நீர் அருந்துதல், புகைத்தல் மற்றும் வெற்றிலை, புகையிலை மெல்லுதல் போன்றவற்றில் ஈடுபடாதீர்.

(vi) அடைபட்டுள்ள குழல்முனைகளில் ஒருபோதும் வாய் வைத்து ஊத வேண்டாம்.

(vii) ஒழுகக்கூடிய தெளிப்பான்களை ஒருபோதும் பயன்படுத்தாதீர். தோல், வாய், கண்களில் மாசு விழுவதைத் தவிர்க்கவும்.

(viii) வயல்களில் கிடைக்கும் பயன்படுத்தப்படாத பூச்சிகொல்லிகளை முகர்ந்து பார்க்கவோ உறிஞ்சிப் பார்க்கவோ கூடாது.

(ix) காற்றின் எதிர்த்திசையில் பூச்சிக்கொல்லிகள் மற்றும் புழுக்கொல்லிகளை ஒருபோதும் தெளிக்காதீர்.

(x) பயன்படுத்தப்படாத பூச்சிக்கொல்லிகள் மற்றும் புழுக்கொல்லிகளை வயல்களில் விட்டுவிடக் கூடாது.

(xi) பூச்சிகொல்லிகள் மற்றும் புழுக்கொல்லிகள் தெளிக்கப்பட்டுள்ள வயல்களில் மனிதர்கள் மற்றும் கால்நடைகளை, தயாரிப்பாளர்கள் குறிப்பிடும் கால வரையறை வரையில் அனுமதிக்கக் கூடாது.

(xii) கிணறு அல்லது ஓடும் நீரோடை அருகில் பூச்சிகொல்லி மற்றும் புழுக்கொல்லிக் கொள்கலன்களைக் கழுவக் கூடாது.

(xiii) சுத்தமான நீர், சோப்பு மற்றும் துவாலைகளை எப்போதும் பயன்படுத்தத்தக்க வகையில் தயாராக வைத்திருக்கவும்.

(xiv) பணிக்குப் பின்பு உணவு உண்டல், நீர் அருந்துதல், புகைத்தல் மற்றும் வெற்றிலை அல்லது புகையிலை மெல்லுதல் முதலிய செயல்களுக்கு முன்பாக கைகள் மற்றும் வெளிப்புறத் தோல் பகுதிகளை சோப்பு மற்றும் தண்ணீர் கொண்டு நன்கு தேய்த்துக் கழுவவும்.

(xv) பூச்சிகொல்லிகள் மற்றும் புழுக்கொல்லிகளை குழந்தைகள் மற்றும் பயன்படுத்தக்கூடாத இதர நபர்களின் கைகளுக்கெட்டாதவாறு சேமிப்பறையில் வைத்துப் பூட்டவும்.

(xvi) பூச்சிகொல்லிகள் மற்றும் புழுக்கொல்லிகள் தெளிக்கப்பட்ட வயல்களுக்குள் நுழையவேண்டாம். களைக்கொல்லிகள் உள்ளிட்ட பூச்சிகொல்லிகள் மற்றும் புழுக்கொல்லிகளுக்கு மீள் நுழைவுக் காலமாக தயாரிப்பாளர்கள் குறிப்பிட்ட வரையறையினைத் தவறாமல் கடைப்பிடிக்கவும்.

(xvii) பூச்சிகொல்லிகள் மற்றும் புழுக்கொல்லிகளை அவற்றுக்கான அடையாளமிட்ட அசல் கொள்கலன்களிலேயே வைக்கவும்.

(xviii) உடனடிப் பயன்பாட்டுக்குத் தேவையான அளவிற்கு அதிகமாக வேற்றுக் கலனில் பூச்சிகொல்லிகள் மற்றும் புழுக்கொல்லிகளை வடிக்க வேண்டாம்.

(xix) பயன்பாடு முடிந்த கொள்கலன்களை முழுவதுமாகக் காலி செய்து, கழுவிய பின் பாதுகாப்பான முறையிவ் அழிக்கவும் அவற்றை நீர்நிலைகளிலிருந்து வெகு தூர இடங்களில் புதைக்கலாம்.

(xx) கொள்கலன்களிலிருந்து பூச்சிக்கொல்லிகள் மற்றும் புழுக்கொல்லிகளின் வாசனை மற்றும் சுவடுகளை அழிக்கமுடியாமலிருந்தால் அக்கொள்கலன்களை வேறு எந்தப் பயன்பாட்டுக்காகவும் மீளப்பயன்படுத்த வேண்டாம்.

(2) படிவம் எண் 26க்குப் பின்னர், பின்வரும் படிவம் சேர்க்கப்பட வேண்டும். அவையாவன:—

**படிவம் எண். 27**

*(விதி 95—ஐச் சேர்ந்த (2)ஆம் உட்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டது.)*

.............ஆண்டுக்கான பூச்சிக்கொல்லிகள், வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுப்பொருட்கள் தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் அவர்களுக்கான காலமுறையிட்ட மருத்துவ பரிசோதனை பதிவேடு.

தொடர் எண். :

பெயர் : வயது

தந்தை / கணவர் பெயர் :

முழு முகவரி :

பாலினம்: ஆண்/பெண் :

அடையாளக் குறிகள் :

பணி நியமன நாள் :

பதவிப்பெயர் :

முன்வரலாறு :

| நோய் | நஞ்சு | ஒவ்வாமை | புழுக்கொல்லிகள் தொடுகை | ஆண்டுகள் எண்ணிக்கை/ பருவகாலங்கள் | குறிப்புரைகள் ஏதேனுமிருப்பின் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

குடும்ப வரலாறு :

| ஒவ்வாமை | உளவியல் ஒழுங்குக் குலைவு | இரத்த ஓட்ட ஒழுங்குக் குலைவு |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| | | |

தனிநபர் சொந்த வரலாறு :

| புகைபிடித்தல் | மதுப் பழக்கம் | இதர பழக்கங்கள் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| | | |

காணறி குறிப்புகள் :

**மருத்துவ பரிசோதனை பணியமர்வுக்கு முந்தைய ஆண்டு முடிவில் குறிப்புரைகள் பரிசோதனை**

**I. பொது பரிசோதனை :**

பொதுவான உடல் அளவுகள்
எடையும் உயரமும்
இரத்த அழுத்தம்
மூச்சுவிடுதல்
இரத்த சோகை
டாதேமா
மஞ்சள் காமாலை
தோல் நிலை
உடல் வெப்பநிலை
சோர்வு
வியர்வை
தூக்கம்
சிறுநீர் வெளியேற்றம்

**II. குடல் இரைப்பை :**

மயக்கம்
வாந்தி
செரிமானம்
ருசி
அடிவயிறு வலி
குடல் அசைவு
ஈரல்
மண்ணீரல்

**III. மார்பக – மூச்சுவிடல் :**

மூக்கு நீர் வெளியேற்றம்
இளைப்பு
இருமல்
கோழை வெளியேற்றம்
நெஞ்சு இறுக்கம்
மூச்சுத்திணறல் (டிஸ்ப்நோயா)
இதயத் துடிப்பு
இதயம்
மிகை இதயத்துடிப்பு (டாசிகார்டியா)

**IV. நரம்பு – தசை :**

தலை வலி

மயக்கம்

எரிச்சல்

நாடித்துடிப்பு

துடிப்பு

நடுக்கம்

வலிப்பு

பாசஸ்தீசியா

காட்சி மயக்கம்

உணர்வற்ற நிலை

ஆழ்மன எதிர்வு

மேல்மட்ட எதிர்வு

சமநிலை இணைப்பு

**V. கண் :**

கருவிழிப்பார்வை

கண்ணீர் ஒழுக்கு

இரட்டைத் தோற்றம்

கூட்டுத்தோற்றம்

**VI. உளவியல் :**

உளப்பாங்கு உணர்வு நிலை

தீர்வு

நடுக்கம்

**VII. சிறுநீரகம் :**

சிறுநீரக நிலை

**VIII. நோயாய்வு :**

இரத்தம் HB%

இரத்தம் DC

ஊனீர் கோலினெஸ்டரேஜ் (serum cholinesterage)

ஊனீர் பிலிரூபின் (serum Bilirubin)

வழக்கமான சிறுநீர் பரிசோதனை

சிறுநீர் நுண்ணோக்கி ஆய்வு

மார்பக எக்ஸ்ரே

**மருத்துவர் பரிந்துரை :**

1. நோயாளி
2. வேலையளிப்பவர்

**மருத்துவர் பரிந்துரைப்படி வேலையளிப்பவர் மேற்கொண்ட நடவடிக்கைகள்**

1. நோயாளி
2. வேலையளிப்பவர்

**பெ. அமுதா,**
*அரசு செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 143, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 30 ஜூன் 2016.]*

1961 ஆம் ஆண்டு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1961) 40 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (2) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் விதிகளில் செய்யக் கருதியுள்ள திருத்தங்களுக்கான பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 40 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து ஆறு வாரங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையைத் தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அவற்றை சென்னை—600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

## வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,—

(1) 43 ஆம் விதியில், ''ஆண்டு விவர அறிக்கை இரு படிகளில்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒருங்கிணைந்த ஆண்டு விவர அறிக்கை'' என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(2) படிவம் XIX—க்கு பதிலாக, பின்வரும் படிவம் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

**''படிவம் 19**

*(43 ஆம் விதியைக் காண்க)*

**31—12—20—ஆம் நாளன்றுடன் முடிவடையும் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த ஆண்டு விவர அறிக்கை**

1. மோட்டார் வாகனப் போக்குவரத்து நிறுவனத்தின் பெயர்:

2. முழுமையான அஞ்சல் முகவரி (நிகரி மற்றும் மின்னஞ்சலுடன்),—

    (i) மோட்டார் வாகனப் போக்குவரத்து நிறுவனம்

    (ii) பதிவு செய்யப்பட்ட அலுவலகம் / தலைமை அலுவலகம்

    (iii) பிரிவுகள்/கிளைகள்

3. வணிகம் / தொழில் / பணி / நிறுவனம் / மேற்கொள்ளப்படும் பணி / அளிக்கப்படும் சேவையின் தன்மை:

4. பதிவெண்:

5. பதிவுச் சான்றிதழின் செல்திறன் அளவு:

6. வேலை அளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி (அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சலுடன்)

7. மேலாளரின் / அங்கீகரிக்கப்பட்ட நபரின் பெயர் மற்றும் முகவரி (அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சலுடன்)

8. அன்றாடம் பணிபுரியும் பணியாளர்களின் சராசரி எண்ணிக்கை:—

    (அ) பெரியவர்கள்:

    (ஆ) வளரிளம் பருவத்தினர்:

    மொத்தம்:

9. நாளொன்றின் வழக்கமான பணி நேரம்:

**10.** அளிக்கப்படும் ஓய்வு இடைவேளை:

**11.** வாராந்திர விடுமுறை:

**12.** 19ஆம் பிரிவிலிருந்து விலக்களிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:

**13.** அவ்வாண்டில் பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை:

**14.** மிகை நேர ஊதியம் மற்றும் படிகள் உட்பட வழங்கப்பட்ட மொத்த சம்பளம் / ஊதியத் தொகை:

**15.** ஈடுசெய் விடுப்பு எடுத்த பணியாளர்களின் எண்ணிக்கை;

(i) அதே திங்களில்

(ii) அடுத்த திங்களில்

(iii) மூன்றாவது திங்களில்

**16.** பணி நிறுத்தம்/இடை நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:—

(i) அந்த ஆண்டில் விடுவிக்கப்பட்ட / பணி இடை நீக்கம் செய்யப்பட்ட / பணி முடிவு பெற்ற / பதவி விலகிய / பணி ஓய்வு பெற்ற / இறந்துபோன பணியாளர்களின் எண்ணிக்கை:

(ii) அளிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை.

(iii) அந்த ஆண்டில் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:—

(iv) அளிக்கப்பட்ட பிழைப்பூதியப் படியின் அளவு:

**17.** ஊதியம்:—

(i) பிடித்தம் உட்பட வழங்கப்பட்ட மொத்த ஊதியம்,—

(அ) அடிப்படை ஊதியம்:

(ஆ) அகவிலைப் படி:

(இ) மிகைநேர ஊதியம்:

(ஈ) ஆதாயமற்ற மிகை ஊதியப் பகிர்வு:

(உ) ரொக்கமாக வழங்கப்பட்ட பிற படிகள்:

(ஊ) அந்த ஆண்டில் வழங்கப்பட்ட முந்தைய ஆண்டுக்கான நிலுவைச் சம்பளம்:

(ii) மாதம் ரூ. **18000/—***க்கும் அதிகமாக ஊதியம் பெறாத நபர்களின் எண்ணிக்கை: (*மத்திய அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் மாற்றத்திற்கு உட்பட்டது)

ஆண்:

பெண்:

வளரிளம் பருவத்தினர்:

(iii) ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்தது குறித்த விவரங்கள்:—

| பிடித்தங்கள் | சம்பந்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை |
|---|---|---|
| (அ) அபராதங்கள் | | |
| (ஆ) சேதங்கள்/இழப்பு | | |
| (இ) ஒப்பந்த முறிவு | | |
| (ஈ) ஏனையவை | | |
| மொத்தம் | | |

(iv) ஊதியக் கால அளவு:

(v) ரொக்கமாக வழங்கப்பட்ட மொத்த ஊதியங்கள்:

(vi) பணமல்லாத வகைகளில் அளிக்கப்பட்ட ஊதியங்களின் மொத்த பண மதிப்பு:

| (vii) அபராதங்களிலிருந்து வழங்கப்பட்ட | நோக்கம் | தொகை |
|---|---|---|
| (அ) | | |
| (ஆ) | | |
| (இ) | | |

(viii) அந்த ஆண்டின் இறுதியில் கையிருப்பாக உள்ள அபராதத் தொகை:

**18.** விடுப்பு:–

(i) ஈட்டிய விடுப்பிற்குத் தகுதியுடைய பணியாளர்களின் எண்ணிக்கை

(ii) ஈட்டிய விடுப்பு பயன்படுத்திய / அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை

(iii) ஈட்டிய விடுப்பிற்கு மாற்றாக ஊதியம் / சம்பளம் வழங்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:

**19.** அளிக்கப்பட்ட நல உதவிகள் (''ஆம்'' என்றால் வழங்கப்பட்ட படிநிலைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடவும்):–

(i) சிற்றுண்டியகம்:

(ii) ஓய்வறைகள்:

(iii) மருத்துவ வசதிகள்:–

(அ) மருந்தகங்களின் எண்ணிக்கை:

(ஆ) மருத்துவர்களின் எண்ணிக்கை:

(இ) செவிலியர்களின் எண்ணிக்கை:

(iv) சீருடை:

(v) முதலுதவிப் பெட்டி:

**20.** பேறுகாலச் சலுகைகள்:

| (i) ……………க்கான பயன்கள் | பயன்பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மொத்த தொகை |
|---|---|---|
| (அ) கருச்சிதைவு: | | |
| (ஆ) பிள்ளைப்பேற்று நிலை: | | |
| (இ) உடல் நலக்குறைவு: | | |
| (ஈ) மருத்துவ மிகை ஊதியம்: | | |
| மொத்தம்: | | |

(ii) **1961** ஆம் ஆண்டு பேறுகாலச் சலுகைத் திட்டத்தின் **6** ஆம் பிரிவின் கீழ் தகவல் அளித்த பெண்களின் எண்ணிக்கை:

(iii) பிள்ளைப்பேற்று நிலையிலிருப்பதன் பேரில் விடுப்பு அனுமதி அளிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை:

(iv) சம்மந்தப்பட்ட பெண்ணிற்கு நேரடியாக அளிக்காமல் மற்றவர்களுக்குத் தொகை வழங்கிய நேர்வுகள்: எண்ணிக்கை: வழங்கப்பட்ட தொகை:

(v) மேல்முறையீட்டு அதிகாரி அல்லது ஆய்வாளரின் உத்தரவின் பேரில் தொகை வழங்கப்பட்ட நேர்வுகள்: எண்ணிக்கை: வழங்கப்பட்ட தொகை:

| | |
|---|---|
| (vi) பேறுகாலச் சலுகை மறுக்கப்பட்ட பின்னர் அளிக்கப்படும் கோரிக்கைகள் | எண்ணிக்கை:<br>அளிக்கப்படாத தொகை: |
| (vii) மறுக்கப்பட்ட மருத்துவ மிகை ஊதியக் கோரிக்கைகள்: | எண்ணிக்கை:<br>அளிக்கப்படாத தொகை: |
| (viii) கருச்சிதைவு ஏற்பட்டதன் பேரில் விண்ணப்பிக்கப்பட்ட விடுப்புகள் நிராகரிக்கப்பட்ட நேர்வுகள்: | எண்ணிக்கை:<br>அளிக்கப்படாத தொகை: |
| (ix) 10 ஆம் பிரிவின் கீழ் உடல் நலமின்மைக்காகக் கூடுதல் விடுப்பு கோரப்பட்டு நிராகரிக்கப்பட்ட நேர்வுகள் | எண்ணிக்கை:<br>அளிக்கப்படாத தொகை: |
| (x) 1961 ஆம் ஆண்டு பேறுகாலச் சலுகைச் சட்டத்தைச் சேர்ந்த 12 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் விதித்துறையின் கீழ் அளிக்கப்படும் பேறுகாலச் சலுகை மற்றும் / அல்லது மருத்துவ மிகை ஊதியத் தொகை கிடைக்கப்பெறாத பெண்கள்: | எண்ணிக்கை:<br>அளிக்கப்படாத தொகை: |
| (xi) 1961 ஆம் ஆண்டு பேறுகாலச் சலுகைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், பேறுகாலத்திற்கு முந்திய மற்றும் பேறுகாலத்திற்குப் பின்னர் கட்டணமின்றிச் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை: | |

**21.** தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி வகையில் வசூலிக்கப்பட்ட தண்டத் தொகையைச் செலுத்திய விவரங்கள்:

(i) வரைவு காசோலையின் எண் மற்றும் நாள்:

(ii) வங்கி:

(iii) தொகை:

**22.** மிகை ஊதியம்:—

(i) மிக ஊதியத் தொகை வழங்கியதால் பயன்பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை:

(ii) அறிவிக்கப்பட்ட மிகை ஊதியத்தின் விழுக்காடு:

(iii) வழங்கப்பட்ட மிகை ஊதியங்களின் மொத்தக் தொகை:

(iv) தொகை வழங்கப்பட்ட நாள்:

**23.** நிரந்தர பணிநிலை அளிக்கப்படுதல்:

(i) 480 நாள்கள் தொடர்ந்து பணிபுரிந்துள்ள தற்காலிகத் தொழிலாளர்களின் எண்ணிக்கை:

(ii) இந்தக் கால அளவில் பணி நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை:

(iii) இந்தக் கால அளவில் பணி நிரந்தரம் செய்யப்படவிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை:

(iv) தாமதத்திற்கான காரணங்கள்:

**24.** ஒப்பந்தத் தொழிலாளர்:—

(i) ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரிகள்:

(ii) ஒப்பந்தக் கால அளவு:

(iii) ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருந்த பணியின் / செயற்பாடுகளின் தன்மை:

(iv) ஒவ்வொரு ஒப்பந்ததாரராலும் பணியமர்த்தப்படும் தொழிலாளர்களின் உயரளவு எண்ணிக்கை:

(v) பணிசெய்த நாட்களின் எண்ணிக்கை:

(vi) பணிசெய்த மனித வேலை நாட்களின் எண்ணிக்கை:

25. மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்:—

(i) சொந்த மாநிலத்தின் ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரிகள்:

(ii) பணியமர்த்தும் மாநிலத்தின் (தமிழ்நாடு) முதன்மை வேலையளிப்பவரின் பெயர்:

(iii) ஒப்பந்தக் கால அளவு:

(iv) புலம்பெயர் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருக்கும் பணியின்/செயற்பாடுகளின் தன்மை:

(v) ஒவ்வொரு ஒப்பந்ததாரராலும் பணியமர்த்தப்படும் புலம்பெயர் தொழிலாளர்களின் உயரளவு எண்ணிக்கை:

(vi) பணிசெய்த நாட்களின் எண்ணிக்கை:

(vii) பணிசெய்த மனித வேலை நாட்களின் எண்ணிக்கை:

(viii) இடம்பெயர்வுப் படியாக வழங்கப்பட்ட தொகை:

(ix) போக்குவரத்துப் பயணப் படியாக வழங்கப்பட்ட தொகை:

(x) போக்குவரத்துப் பயணங்களுக்காக வழங்கப்பட்ட ஊதியங்களின் தொகை:

நான் நன்கு அறிந்தவரையிலும் நம்புகிறவரையிலும் மேற்சொன்ன தகவல்கள் சரியானவை என்று சான்றளிக்கிறேன்.

நாள்: வேலையளிப்பவரின் கையொப்பம்.''

இடம்:

**பெ. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 145, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 30 ஜூன் 2016]*

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தல் மற்றும் நீக்குதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) பிரிவு 35—இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தல் மற்றும் நீக்குதல்) விதிகளில் செய்யக்கருதியுள்ள கீழ்க்காணும் வரைவுத் திருத்தங்கள், மேற்சொன்ன சட்டத்தின் 35ஆம் பிரிவின்(1) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவுத் திருத்தங்கள் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து ஒரு மாத கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை—600 006—ல் உள்ள தொழிலாளர் நல ஆணையர் மூலம் அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,

(1) விதி 18—இல், துணை விதி (1)க்குப் பதிலாக பின்வரும் துணை விதி அமைத்துக்கொள்ளபடும். அதாவது:—

''17ஆம் விதியின் (1) துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய விண்ணப்பம் வரப்பெற்ற நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் பதிவு அதிகாரி, 7ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ், படிவம் II—ல் பதிவுச் சான்றிதழை வழங்குவார்''

(2) விதி 23 இல் (2) துணை விதியில் ''அறுபது நாட்கள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''முப்பது நாட்கள்'' என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்படும்

**பெ. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.